# தனியுரிமைக் கொள்கை

இந்தத் தனியுரிமைக் கொள்கையில் ("கொள்கை"), Qualcomm Incorporated மற்றும் எங்கள் துணை நிறுவனங்கள் (கூட்டாக "நாங்கள்", "எங்களுக்கு", அல்லது "எங்கள்") ஆகிய நாங்கள், எவ்வாறு தனிப்பட்ட தரவைச் சேகரிக்கிறோம், பயன்படுத்துகிறோம், செயலாக்குகிறோம் மற்றும் பரிமாற்றுகிறோம் என்பது பற்றிய தகவல்களை வழங்குகிறோம். Qualcomm Incorporated மற்றும் எங்கள் துணை நிறுவனங்கள் என்பவை உலகம் முழுவதும் வணிகங்கள் (சட்ட நிறுவனங்கள்), வணிகச் செயல்முறைகள் மற்றும் தகவல் அமைப்புகள் ஆகியவற்றில் நாங்கள் நிர்வகிக்கும் தரவை பகிர்ந்துகொள்ளுகின்ற ஒரு உலகளாவிய நிறுவனமாகும். எனவே, இந்தக் கொள்கைக்குக்காக, எங்களுக்குப் பொருந்தக்கூடிய பல தனியுரிமை மற்றும் தரவுப் பாதுகாப்புச் சட்டங்களை உள்ளடக்குவதற்கு பரந்தளவில் "தனிப்பட்ட தரவு" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம்; "தனிப்பட்ட தரவு" என்பது ஒரு அடையாளம் காணப்பட்ட இயல்பான நபருடன் சம்பந்தப்பட்ட அல்லது ஓர் இயல்பான நபரை அடையாளம் காண நியாயமான முறையில் (அதாகவே அல்லது நியாயமான முறையில் கிடைக்கப்பெறுகின்ற மற்ற தரவுகளுடன் சேர்ந்து) பயன்படுத்தக்கூடிய தகவல் என்று பொருள்படும்.

## நோக்கம்

இந்தக் கொள்கையானது எங்கள் இணையதளங்கள், தயாரிப்புகள், சேவைகள், மென்பொருள் அல்லது இந்தக் கொள்கைக்கான ஒரு நேரடி இணைப்பை நாங்கள் இடுகையிடுகின்ற அல்லது இந்தக் கொள்கைக்குள் மேற்கோள் காட்டப்படுகின்ற பயன்பாடுகள் (கூட்டாக "சேவைகள்") ஆகியவற்றுக்குப் பொருந்தும். இந்தக் கொள்கையானது சேவைகள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவை மட்டுமே உள்ளடக்குகிறது, தமது சொந்த, தனியான தனியுரிமைக் கொள்கைகளைப் பேணுகின்ற மற்றச் சேவைகளின் கட்டுப்பாடற்ற தரவு சேகரிப்பு நடைமுறைகளை

மட்டுமன்றி வேறு நடைமுறைகளையும் உள்ளடக்காது. எப்போதாவது, கருத்தாய்வுகள் மற்றும் சிறப்பு நோக்கத்திற்கான வலைப் பக்கங்களுடன் தொடர்பாக இந்தக் கொள்கையை மேற்கோள் காட்டுகிறோம், எடுத்துக்காட்டாக, எங்கள் தொழில்கள் வலைப் பக்கங்கள்; இத்தகைய சூழ்நிலைகளில், குறிப்பிட்ட கொள்கை அல்லது ஒப்புதல் கோரிக்கையில் (எ.கா., சேகரிக்கப்பட்ட தரவின் வகைகள் அல்லது சேகரிப்பின் நோக்கங்கள் தொடர்பானவை) திருத்தியவாறு இந்தக் கொள்கை பொருந்தும்.

# தரவு வகைகள் மற்றும் சேகரிப்பு முறைகள்

கீழே விவரிக்கப்பட்ட வழிமுறைகளின் மூலம் பல்வகையான தனிப்பட்ட தரவுகளைச் சேகரிக்கிறோம். நாங்கள் சேகரிக்கும் தரவைப் பற்றி உங்களுக்கு தேர்வுகள் உள்ளன. எங்களுக்குத் தரவை வழங்கும்படி உங்களிடம் கேட்கப்படும்போது, நீங்கள் வழங்குவதில்லை என்று தேர்வு செய்யக்கூடும். ஆனால் தரவை வழங்குவதை நீங்கள் நிராகரித்தால், பொருந்தக்கூடிய தயாரிப்பு அல்லது சேவையைப் பயன்படுத்துவதற்கான உங்கள் திறனை அது குறைக்கலாம் அல்லது கட்டுப்படுத்தலாம்.

**நீங்கள் சமர்ப்பிக்கும் தரவு.** நீங்கள் எங்களிடம் இருந்து தகவல் கோரும்போது, பதிவு செய்யும்போது, தயாரிப்பு அல்லது சேவையை ஆர்டர் செய்யும்போது அல்லது வேண்டுமென்றே எங்களுக்கு அத்தகைய தகவலை அனுப்பும்போது, உங்கள் பெயர், மின்னஞ்சல் முகவரி(கள்), அஞ்சல் முகவரி(கள்), தொலைபேசி எண்(கள்) மற்றும் நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் வணிகத்துடன் தொடர்பான தரவு ஆகியவற்றை நாங்கள் சேகரிக்கிறோம். கட்டணம் வசூலிக்கக்கூடிய சேவைகள் தொடர்பில், கட்டணத் தகவலை (எ.கா., கிரெடிட் கார்டு எண் மற்றும் தொடர்புடைய சரிபார்ப்பு தரவு), தொலைபேசி எண் மற்றும் பில்லிங் மற்றும் ஷிப்பிங் முகவரிகள் போன்றவற்றையும் நாங்கள் சேகரிக்கிறோம்.

**எங்கள் இணையதளங்களில் இருந்து நாங்கள் தானாகச் சேகரிக்கும் தரவு.** எங்கள் வலைத்தளங்களில் ஒன்றை நீங்கள் பார்வையிடும்போது, உங்கள் கணினி அல்லது மொபைல் சாதனத்திலிருந்து உங்கள் உலாவி வகை, இயக்க முறைமை, IP முகவரி மற்றும் நீங்கள் தளத்தை அணுகுவதற்குப் பயன்படுத்தும் டொமைன் பெயர் போன்ற பொதுத் தரவுகளையும், நீங்கள் எங்கள் தளத்தை உங்கள் மொபைல் சாதனத்தின் மூலம் அணுகினால் அதன் வகையையும் சேகரிக்கிறோம். கூடுதலாக, நீங்கள் எங்கள் வலைத்தளங்களை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள் என்பது பற்றிய தரவையும் சேகரிக்கிறோம், அதாவது நீங்கள் தளத்தைப் பார்வையிடும் தேதி மற்றும் நேரம், நீங்கள் பார்வையிடும் தளத்தின் பகுதிகள் அல்லது பக்கங்கள், தளத்தைப் பார்வையிடும் நேரத்தின் அளவு, நீங்கள் தளத்திற்கு மீண்டும் வரும் முறைகளின் எண்ணிக்கை மற்றும் பிற கிளிக் ஸ்ட்ரீம் தரவு ஆகியவை.

**குக்கீகள்.** எங்கள் வலைத்தளங்கள் அல்லது வலைப் பயன்பாடுகளை நீங்கள் பயன்படுத்துவதைப் பற்றிய தரவுகளைச் சேகரிக்க, குக்கீகள், வலை பீக்கன்கள் அல்லது ஒத்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறோம். ஒரு குக்கீ என்பது நீங்கள் தளத்தை அணுகும்போது உங்கள் கணினி அல்லது சாதனத்தின் வன் இயக்ககத்தில் சேமிக்கப்படும் சிறிய உரைக் கோப்பு. பின்வருவனவற்றுக்காக உட்பட, எங்கள் தளங்கள் மற்றும் சேவைகளைச் செயல்படுத்துவதற்கு உதவ, குக்கீகளைப் பயன்படுத்துகிறோம்: 1)உங்களை நினைவில் கொள்வதற்கு, இதனால் நீங்கள் தளத்திற்கு மீண்டும் திரும்பும்போது அதே தகவலை நீங்கள் கொடுக்க வேண்டியதில்லை, (2) தளத்தில் உள்ள தனிப்பயனாக்கப்பட்ட உள்ளடக்கம் அல்லது சலுகைகளை உங்களுக்கு வழங்குவதற்கு; (3) தளத்தின் செயல்திறனைக் கண்காணிக்க, ஆராய்ச்சியை நடத்த, எங்கள் உள்ளடக்கம் மற்றும் சேவைகளை மேம்படுத்த உதவும் ஒன்றுதிரண்ட புள்ளிவிவரங்களை உருவாக்குவதற்கு மற்றும் (4) எங்கள் தளங்கள் மற்றும் சேவைகளின் பாதுகாப்பைக் காத்துக்கொள்ள உதவுவதற்கு.

வலைத்தளப் பகுப்பாய்வுக் கூட்டாளிகள், விளம்பரதாரர்கள் அல்லது விளம்பர நெட்வொர்க்குகள் போன்ற பிற நிறுவனங்களும் அவர்களது குக்கீகள் அல்லது வலை பீக்கன்களை (1x1 pixel.gif அல்லது செயல்

குறிச்சொற்கள் என்றும் குறிப்பிடப்படுகிறது) தளத்தில் அமைக்க அல்லது அணுகவும் நாங்கள் அனுமதிக்கிறோம். எடுத்துக்காட்டாக, இணையத்தில் எங்கள் சார்பாக விளம்பரங்களை வழங்குவதற்கோ அல்லது தளத்தில் மற்ற நிறுவனங்களுக்கான விளம்பரங்களைக் காட்சிப்படுத்ததவோ மூன்றாம் தரப்பு விளம்பர நிறுவனங்களைப் பயன்படுத்துகிறோம். இந்த மூன்றாம் தரப்பு விளம்பர நிறுவனங்கள், நாங்கள் உட்பட அவற்றின் வாடிக்கையாளர்களுக்கான விளம்பரங்களின் செயல்திறனை அளவிடவும் மேம்படுத்தவும் குக்கீகளையும் வலை பீக்கன்களையும் பயன்படுத்துகின்றன. அவ்வாறு செய்ய, இந்த நிறுவனங்கள் காலப்போக்கில் எங்கள் தளத்திற்கும் மற்ற வலைத்தளங்களுக்கும் உங்கள் வருகைகள் பற்றிய தரவுகளைப் பயன்படுத்துகின்றன. இந்தத் தரவில் அடங்கக் கூடியவை: பதாகை விளம்பரம் காட்டப்படும் தேதி/நேரம், அவற்றின் குக்கீயில் அடங்கியுள்ள தனிப்பட்ட அடையாளங்காட்டி மற்றும் உங்கள் சாதனத்தின் IP முகவரி ஆகியவை. உங்களுக்கு ஆர்வமுள்ள பொருட்களையும், சேவைகளையும் பற்றிய விளம்பரங்களைப் பார்க்க அதிக வாய்ப்புள்ளவாறு, இந்தத் தரவானது விளம்பரங்களைத் தனிப்பயனாக்குவதற்கும் பயன்படுத்தப்படலாம். இந்த நடைமுறை பற்றிய கூடுதல் தகவலுக்கும், தனிப்பயனாக்கப்பட்ட விளம்பரங்கள் குறித்த உங்கள் விருப்பங்களை அறியவும், இந்த விலகல் கட்டுரையைக் காண்க.

குக்கீகளை நிராகரிக்கும் சுதந்திரம் உங்களுக்கு இருக்கிறது, ஆனால் அவ்வாறு செய்வதன் மூலம், நீங்கள் தளத்திலுள்ள சில அம்சங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது அல்லது எங்கள் சலுகைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. உங்கள் குக்கீ விருப்பங்களை எவ்வாறு மாற்றுவது என்பதை அறிய, உங்கள் உலாவியின் “உதவி” மெனுவைப் பார்க்கவும். மேலும் தகவலுக்கு, எங்கள் குக்கீ கொள்கையைப் பார்க்கவும்.

**மென்பொருள் மற்றும் பயன்பாடுகள்:** மொபைல் சாதனத்தின் செயல்திறனை மேம்படுத்த, பேட்டரி சக்தியைப் பாதுகாக்க, சாதனத்தின் பாதுகாப்பை மேம்படுத்த அல்லது பிற நன்மைகளை வழங்க உதவக்கூடிய மொபைல் சாதனங்களுக்கான பல்வேறு மென்பொருள்

மற்றும் பயன்பாடுகளை Qualcomm Incorporated-இன் துணை நிறுவனங்கள் உருவாக்குகின்றன. இந்த மென்பொருள் பயன்பாடுகளின் மூலம், இருப்பிடத் தரவு, தனிப்பட்ட அடையாளங்காட்டிகள் (சிப்செட் தொடர் எண் அல்லது சர்வதேச சந்தாதாரர் ID போன்றவை), சாதனத்தில் நிறுவப்பட்ட மற்றும்/அல்லது இயங்கும் பயன்பாடுகள், மேக், மாடல் மற்றும் வயர்லெஸ் கேரியர் போன்ற உள்ளமைவுத் தரவு, இயக்க முறைமை மற்றும் பதிப்புத் தரவு, மென்பொருள் உறுப்புத் தரவு மற்றும் சிப்செட் செயல்திறன், பேட்டரிப் பயன்பாடு மற்றும் வெப்பத் தரவு போன்ற சாதனத்தின் செயல்திறனைப் பற்றிய தரவு. மேலும் அறிக

**மூன்றாம் தரப்பு ஆதாரங்கள்:** தரவுத் தரகர்கள், சமூக நெட்வொர்க்குகள், பிற கூட்டாளிகள் அல்லது பொது ஆதாரங்கள் போன்ற மூன்றாம் தரப்பு ஆதாரங்களில் இருந்தும் தனிப்பட்ட தரவை நாங்கள் பெறலாம்.

# சேகரிப்பு நோக்கங்கள், தரவின் பயன்பாடு

நீங்கள் பயன்படுத்தும் தயாரிப்புகளை வழங்குவதற்கு, எங்கள் வணிகத்தைச் செயல்படுத்துவதற்கு, எங்கள் ஒப்பந்த மற்றும் சட்டபூர்வமான கடமைகளை நிறைவேற்றுவதற்கு, எங்கள் அமைப்புகள் மற்றும் எங்கள் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பைக் காப்பதற்கு அல்லது பிற நியாயமான ஆர்வங்களை நிறைவேற்றுவது ஆகியவற்றுக்கு உங்கள் ஒப்புதலுடன் மற்றும்/அல்லது தேவைக்கேற்ப உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவலை நாங்கள் சேகரித்து, செயலாக்குகிறோம். நாங்கள் தரவைச் சேகரித்து, பயன்படுத்தும் நோக்கங்கள் பின்வருமாறு:

- தகவலுக்கான உங்கள் கோரிக்கை அல்லது ஒரு சேவைக்குச் சந்தா சேர அல்லது ஒரு தயாரிப்பை வாங்குவதற்கான உங்கள் கோரிக்கையை போன்ற நீங்கள் அனுப்பிய கோரிக்கைக்குப் பதிலளிக்க;
- நீங்கள் கோரும் சேவையை(களை) வழங்க, நிர்வகிக்க, பராமரிக்க மற்றும் பாதுகாக்க;

- எங்கள் சேவைகள் மற்றும் எங்கள் அமைப்புகளை நிர்வகித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் உள்ளிட்ட எங்கள் வணிகத்தை செயல்படுத்த மற்றும் முன்னேற்ற, புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உருவாக்க மற்றும் பிற உள் வணிக நோக்கங்களுக்காக;
- எங்கள் சேவைகளின் பயனர்களின் விருப்பத்தேர்வுகளை நன்கு புரிந்துகொள்வதற்கு, எங்கள் சேவைகளின் பயன்பாடு பற்றிய ஒருங்கிணைந்த புள்ளிவிவரங்களைத் தொகுப்பதற்கு மற்றும் எங்கள் வலைத்தளம் மற்றும் சேவைகள் குறித்து உங்கள் அனுபவத்தைத் தனிப்பயனாக்க உதவுவதற்கு;
- எங்கள் தொழில்நுட்பங்கள், தயாரிப்பு அல்லது சேவை வெளியீடுகள், செய்திகள் மற்றும் பிற தகவல்தொடர்புகள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை உங்களுக்கு வழங்குவதற்கு; மற்றும்
- இந்தக் கொள்கையில் அல்லது நாங்கள் தரவு சேகரிக்கும் இடத்தில் நாங்கள் விவரிக்கின்ற வேறு ஏதேனும் பயன்பாடு.

இந்த நோக்கங்களை அடைய மற்றும் பொருந்தும் சட்டம் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு, நாம் பல்வேறு ஆதாரங்களில் இருந்து சேகரிக்கும் பல்வேறு வகையான தரவுகளை இணைக்கலாம்.

# நாங்கள் தரவைச் சேமித்து, செயல்படுத்தும் இடம்

ஆசியா மற்றும் ஐரோப்பியப் பொருளாதாரப் பகுதி மட்டுமன்றி வேறு இடங்கள் உட்பட, நாங்கள் அமெரிக்காவிலும், உலகெங்கிலும் உள்ள சேவையகங்களிலும் தரவுகளைச் சேமித்துச் செயலாக்குகிறோம். இந்தக் கொள்கையின்படி தனிப்பட்ட தரவுகளை நாங்கள் எங்கே சேமித்தாலும் செயல்படுத்தினாலும், இந்தக் கொள்கைக்கு இணங்கவும், பொருந்தக்கூடிய சட்டத்திற்கு இணங்கவும் தரவு செயலாக்கப்படுவதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

நாங்கள் ஐரோப்பியப் பொருளாதாரத் பகுதியிலிருந்து மற்ற நாடுகளுக்கு தனிப்பட்ட தரவுகளை பரிமாறிக் கொள்கிறோம், அவற்றில் சிலவற்றுக்கு, போதுமான அளவு தரவுப் பாதுகாப்பு இருக்க வேண்டுமென ஐரோப்பிய ஆணையத்தால் தீர்மானிக்கப்படவில்லை. நாங்கள் அவ்வாறு செய்யும்போது, பரிமாற்றத்தை (உங்கள் ஒப்புதல் அல்லது சட்ட ஒப்பந்தங்கள் போன்றவை) செயல்படுத்த பல்வேறு சட்ட வழிமுறைகளை நாங்கள் பயன்படுத்துகிறோம்.

# தனிப்பட்ட தரவின் வெளிப்படுத்துகைகள்

Qualcomm (அதன் துணைநிறுவனங்கள் உட்பட) -இற்குள் உங்கள் தனிப்பட்ட தரவை அணுகுகிறோம் மற்றும் இந்தக் கொள்கையில் உள்ள நோக்கங்களுக்காக எங்கள் சார்பாகத் தரவைச் செயலாக்கும் மூன்றாம் தரப்பு வென்டருடன் அல்லது சேவை வழங்குநர்களுடன் தரவைப் பகிர்ந்து கொள்கிறோம். எங்கள் வணிக வாடிக்கையாளர்களின் ஊழியர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் கூட பயிற்சி அல்லது பிற சேவைகளையும் நாங்கள் வழங்கலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில், எங்கள் பயிற்சி மற்றும் பிற சேவைகளைப் பயன்படுத்துவதுடன் தொடர்பான தரவை தமது வணிகப் பயன்பாட்டிற்காக அடையாளங்காணப்பட்ட வணிக வாடிக்கையாளர்களுடன் நாங்கள் பகிர்ந்து கொள்ளலாம். சட்டத்தின்படி அல்லது எங்கள் அல்லது பிறரின் சட்ட உரிமைகளைப் பாதுகாக்கும் அல்லது நடைமுறைப்படுத்தும் நோக்கிலும் உங்கள் தரவை நாங்கள் பகிரக்கூடும், எ.கா., சட்ட அமலாக்க அதிகாரிகளின் கோரிக்கைகள் தொடர்பாக மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உட்பட ஏனையவையும். எங்கள் வணிகத்தின் அனைத்து அல்லது பகுதிகளின் வருங்கால அல்லது உண்மையான விற்பனை, இணைப்பு, பரிமாற்றம் அல்லது வேறு மறுஒழுங்கமைப்பு ஆகியவற்றுடன் தொடர்பாக உங்கள் தரவை நாங்கள் பகிர்ந்து கொள்ள அல்லது பரிமாற்றக் கூடும். இறுதியாக, நீங்கள் எங்களுக்கு அனுமதியளித்த உங்கள் தனிப்பட்ட தரவையும் நாங்கள் பகிர்ந்து கொள்ளலாம்.

## உங்கள் தேர்வுகள்

**தேர்வு செய்தல்/விலக்குதல்.** மின்னஞ்சல் சந்தைப்படுத்தல் போன்ற சில சந்தர்ப்பங்களில், நாங்கள் சில வகையான தரவு சேகரிப்பு, பயன்பாடு அல்லது பகிர்தல் ஆகியவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கு அல்லது விலக்குவதற்கான திறனை உங்களுக்கு வழங்குகிறோம். இத்தகைய சூழ்நிலைகளில், நாங்கள் உங்கள் தேர்வை மதிக்கிறோம்.

**தரவுப் பொருள் உரிமைகள்.** உங்களுடைய தனிப்பட்ட தரவு சம்பந்தமான அணுகல், திருத்தம், அழித்தல், கட்டுப்பாடு அல்லது மற்ற உரிமைகளைக் கோருவதற்கு சில நாடுகளின் அல்லது மாநிலங்களின் சட்டங்கள் உங்களை அனுமதிக்கும். அத்தகைய உரிமைகளை நடைமுறைப்படுத்த இங்கே கிளிக் செய்யவும்.

**தடமறிய வேண்டாம்.** வலை உலாவிகளால் அனுப்பப்படும் “தடமறிய வேண்டாம்” (”DNT”) சிக்னல்களுக்கு தற்போது நாங்கள் பதிலளிப்பதில்லை. DNT சிக்னல்களை எவ்வாறு விளக்க வேண்டும் மற்றும் அவற்றைப் பெறும் வலைத்தளங்களும் மூன்றாம் தரப்பினர்களும் என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க, இன்னும் ஒரு சீரான தரநிலை பின்பற்றப்படவில்லை. இருப்பினும், மேலே உள்ள குக்கீகள் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள உங்கள் உலாவி அமைப்புகளில் உள்ள குக்கீ கட்டுப்பாடுகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட விளம்பரப்படுத்தல் கட்டுப்பாடுகள் உட்பட, தரவு சேகரிப்பு மற்றும் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் பல்வேறு வழிகளை நீங்கள் பயன்படுத்தலாம்.

# தக்கவைப்பு

உங்கள் கணக்கு செயலில் இருக்கும்போது அல்லது உங்களுக்கு சேவைகளை வழங்குவதற்குத் தேவைப்பட்டவாறு, தனிப்பட்ட தரவைத் தக்கவைக்கிறோம். தரவு சேகரிக்கப்படும் வணிக நோக்கத்திற்காக அந்தத் தரவு இனி அவசியமில்லாதபோது, கணிசமான ஒரு காலத்திற்குள் தனிப்பட்ட தரவ� நீக்கிவிடுவோம் எவ்வாறாயினும், எங்களின் சட்டப்பூர்வமான கடமைகளுடன் இணங்குவதற்கும், தகராறுகளைத் தீர்ப்பதற்கும், எங்கள் ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவதற்கும்

தேவைப்பட்டவாறு தனிப்பட்ட தரவுகளைத் தக்கவைத்துக்கொண்டு பயன்படுத்துவோம்.

## பாதுகாப்பு

இணையத்தில் நிகழும் பரிமாற்றங்கள் 100% பாதுகாப்பானவை அல்லது பிழை இல்லாதவை அல்ல. இருப்பினும், இழப்பு, தவறான பயன்பாடு மற்றும் அங்கீகரிக்கப்படாத அணுகல், வெளிப்படுத்தல், மாற்றம் செய்தல் மற்றும் அழித்தல் ஆகியவற்றிலிருந்து உங்கள் தரவைப் பாதுகாக்க நாங்கள் நியாயமான நடவடிக்கைகளை எடுக்கிறோம். உங்கள் கடவுச்சொல் மற்றும் பயனர் IDகளைப் பாதுகாப்பதும், எங்கள் சேவைகளில் ஒன்றுக்கான உங்கள் கடவுச்சொல் அல்லது பயனர் ID திருடப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கிறீர்கள் என்றால் கீழே பட்டியலிடப்பட்ட தொடர்பு முறைகளில் ஒன்றைப் பயன்படுத்தி எங்களுக்கு தெரிவிப்பதும் உங்கள் பொறுப்பாகும். உங்கள் கடவுச்சொல் மற்றும் பயனர் ID வழியாகச் செயற்படுத்தப்படும் எங்கள் சேவைகளின் எந்தவொரு அங்கீகாரமற்ற பயன்பாட்டிற்கும் நீங்கள் மட்டுமே பொறுப்பு.

## குழந்தைகளின் தனியுரிமை

எங்கள் சேவைகள் வயது வந்தோருக்கானவை. பொருந்தும் சட்டத்தால் வரையறுக்கப்பட்டபடி குழந்தைகளிடமிருந்து தனிப்பட்ட முறையில் அடையாளம் காணக்கூடிய தகவலை வேண்டுமென்றே அல்லது தெரிந்தே நாங்கள் சேகரிப்பதில்லை, மேலும் குழந்தைகள் எங்களுக்கு தனிப்பட்ட தரவு எதையும் சமர்ப்பிக்கக் கூடாது என்று நாங்கள் கோருகிறோம்.

## திருத்தங்கள்

எந்த நேரத்திலும் இந்தக் கொள்கையின் பகுதிகளை மாற்றும், திருத்தும், சேர்க்கும் அல்லது நீக்கும் உரிமை எங்களுக்கு உள்ளது, ஆனால் கடைசியாகப் புதுப்பிக்கப்பட்ட தேதியைக் கொள்கையை குறிப்பிடுவதன் மூலம் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை உங்களுக்கு எச்சரிக்கை செய்வோம். நாங்கள் தகவல் வகையில்

கொள்கையை மாற்றினால், குறைந்தபட்சம் முப்பது நாட்களுக்கு முன்னர் உங்களிடம் முறையான ஆன்லைன் அறிவிப்பை வழங்குவோம் மற்றும்/அல்லது சட்டத்தின்படி உங்கள் வெளிப்படையான ஒப்புதலைப் பெறுவோம். நீங்கள் எங்கள் வலைத்தளங்களைப் பார்வையிடும்போது அல்லது எங்கள் சேவைகளைப் பயன்படுத்தும்போது, இந்தக் கொள்கையின் தற்போதைய பதிப்பை ஏற்றுக்கொள்கிறீர்கள். மாற்றங்கள் எதையும் பற்றி அறிந்துகொள்வதற்காக, அவ்வப்போது பயனர்கள் இந்தக் கொள்கையை மீண்டும் பார்வையிடும்படி பரிந்துரைக்கிறோம்.

## எங்களைத் தொடர்பு கொள்க

எங்களைத் தொடர்பு கொள்ள, எங்களுக்கு privacy@qualcomm.com என்ற முகவரியில் மின்னஞ்சலை அனுப்பவும் அல்லது பின்வரும் முகவரிக்கு எழுதியனுப்பவும்: Qualcomm Incorporated, Attn. Privacy Counsel, 5775 Morehouse Drive, San Diego, CA 92121.

செயலில் வந்த தேதி: ஏப்ரல் 30, 2019

©2019 Qualcomm Technologies, Inc. மற்றும்/அல்லது அதன் துணை நிறுவனங்கள்.